**INTERNATIONAL INDIAN SCHOOL DAMMAM-**

**MIDDLE SECTION**

**ANNUAL EXAM WORKSHEET 25-26**

**SUBJECT : TAMIL** **CLASS - VI**

---

## பகுதி – அ படித்தல்

**கீழ்காணும் பத்தியை படித்து உணர்ந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

முயல் விலங்குகளில் மிகச் சிறியது. இது பாலூட்டி வகையைச் சார்ந்தது. மிகவும் சாதுவான விலங்காகும். முயல், காட்டு முயல், குழி முயல் என இருவகை உண்டு. குழி முயல் கூட்டமாய்க் குழிகளில் வசிக்கும். முயலின் முன்னங்கால்கள் குட்டையாகவும், பின்னங்கால்கள் நீளமாகவும் இருக்கும். முயலின் உடல் முழுவதும் மென்மையான உரோமத்தால் மூடப்பட்டிருக்கும். முயலின் உரோமம் அதன் வெப்பத்தைக் காக்கப் பயன்படுகிறது. கேரட், கோஸ், கீரை போன்றவை முயலுக்குப் பிடித்தமான உணவுகள் ஆகும்.

**வினாக்கள்**

1. முயல் எவ்வகை விலங்கு?
2. முயல் எத்தனை வகைப்படும்?
3. முயலின் முன்னங்கால்கள் எவ்வாறு இருக்கும்?
4. முயலின் உரோமம் எதைக் காக்கப் பயன்படுகிறது?
5. முயலின் உணவுகள் யாவை?

## பகுதி - ஆ இலக்கணம்

### சொல்

**சான்று தருக:**

1. ஈரெழுத்துச் சொல் - ____________________
2. முவெழுத்துச் சொல் - ____________________
3. பெயர்ச் சொல் - ____________________

4. வினைச் சொல்- ________________

5. இடைச் சொல் - ________________

6. உரிச சொல் - ________________

**இலக்கணக்குறிப்பு தருக**

1. காளை- ____________________
2. மாநகர்- ____________________
3. ஔவை- ____________________
4. போ- ____________________
5. மணிமேகலை- ____________________

**அடைப்புக்குள் கூறியவாறு செய்க.**

1. மகிழ்ந்தான் (தகுந்த உரிச்சொல் சேர்த்து எழுதுக)
2. கயல்விழி படித்தாள் (பெயர்ச்சொல்லை எழுதுக)
3. மாலா பாடினாள் (வினைச்சொல்லை எழுதுக)
4. கோலம் (எத்தனை எழுத்து சொல்?)

## ***காலம்***

***அ ) கோடிட்ட இடத்தை நிரப்புக.***

*1) காலம் ___________ வகைப்படும்.*

*2 ) நடக்கப்போகும் நிகழ்ச்சியைக் குறிப்பது ______________________எனப்படும்.*

*3) உணவு உண்கிறான் என்பது ____________________ காலத்தைக் குறிக்கும்.*

*4 ) வருங்காலம் ___________________என்றும் அழைக்கப்படும்.*

**ஆ கூறியவாறு செய்க**

1. *கல்வி கற்றாள் (வினைச்சொல்லை எடுத்து எழுதுக ) _____________________*
2. *குமரன் படிப்பான் (நிகழ்காலம் ஆக்குக ) _____________________*
3. *கோதை எழுந்தாள் (எதிர்காலம் ஆக்குக ) _____________________*
4. *குரங்குகள் தாவுகின்றன (இறந்த காலம் ஆக்குக ) ____________________*
5. *ஆசிரியர் கற்பிக்கிறார் ( இறந்த காலம் ஆக்குக ) ___________________*

**இ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக**

*1) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்*

*அ) நிகழ்காலம்*

*ஆ) இறந்த காலம்*

*இ) வருங்காலம்*

*2) தாத்தா மரம் நடுவார்*

*அ) நிகழ்காலம்*

*ஆ) இறந்த காலம்*

*இ) வருங்காலம்*

*3)அழைப்பான்*

*அ) நிகழ்காலம்*

*ஆ) இறந்த காலம்*

*இ) வருங்காலம்*

*4) வீழ்வான்*

*அ) நிகழ்காலம்*

*ஆ) இறந்த காலம்*

*இ) வருங்காலம்*

**வாக்கியங்கள்**

***அ ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.***

*1)கண்ணன் குழல் ஊதினான் ( வினா வாக்கியமாக மாற்று )*

______________________________________________________________

*2)சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார் ? ( செய்தி வாக்கியமாக மாற்றுக )*

______________________________________________________________

*3) பாம்பினைக் கண்ட அருண் அலறினான் ( உணர்ச்சி வாக்கியமாக மாற்று*

______________________________________________________________

*4 ) பள்ளிக்குச் செல்லுமாறு அம்மா கூறினார் ( கட்டளை வாக்கியமாக மாற்றுக*

______________________________________________________________

*5) உணவு உண் ( எவ்வகை வாக்கியம் எனக் கூறுக )*

______________________________________________________________

*6) கிழக்கே சூரியன் உதிக்கிறது ( எவ்வகை வாக்கியம் எனக் கூறுக)*

______________________________________________________________

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

*1.கருத்து வகை வாக்கியங்கள் ________________ வகைப்படும்.*

*2.கனிமொழி பாடம் படித்தாள் - இத்தொடரில் கனிமொழி என்பது*

*_______________________.*

*3.முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொல் தொடர் ______________ எனப்படும்.*

*4. கேள்வியால் வருவது வாக்கியம் ____________________*

*5. ஔவை ஆத்திச்சூடியை இயற்றினார் என்பது ______________________.*

*வாக்கியம்*

***இ) பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடு.***

***1) திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.***

*அ) செய்தி வாக்கியம்*

*ஆ) கட்டளை வாக்கியம்*

*இ) வினா வாக்கியம்*

*ஈ) உணர்ச்சி வாக்கியம்*

***2) இராமனின் மனைவி யார்?***

*அ) செய்தி வாக்கியம்*

*ஆ) கட்டளை வாக்கியம்*

*இ) வினா வாக்கியம்*

*ஈ) உணர்ச்சி வாக்கியம்*

***3) ஐயகோ! மலை சாய்ந்ததா !***

*அ) செய்தி வாக்கியம்*

*ஆ) கட்டளை வாக்கியம்*

*இ) வினா வாக்கியம்*

*ஈ ) உணர்ச்சி வாக்கியம்*

***4) காலையில் எழு !***

*அ) செய்தி வாக்கியம்*

*ஆ) கட்டளை வாக்கியம்*

*இ) வினா வாக்கியம்*

*ஈ) உணர்ச்சி வாக்கியம்*

**செய்வினை செயப்பாட்டுவினை**

***அ ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.***

1) *பாட்டி வடை சுட்டாள் (செயப்பாட்டு வினையாக மாற்றுக )*

___

2) *காவலர் திருடனைப் பிடித்தனர் (செயப்பாட்டு வினையாக மாற்றுக*

___

3) *பானை குயவனால் வனையப்பட்டது. ( செய்வினையாக மாற்றுக )*

___

4) *முட்டை கோழியால் இடப்பட்டது (செய்வினையாக மாற்றுக )*

___

**சரியான சொற்றொடரை தேர்வு செய்க**

1. அ. கருத்து வகை வாக்கியம் இரண்டு வகைப்படும்
   ஆ. கருத்து வகை வாக்கியம் நான்கு வகைப்படும
   இ. கருத்து வகை வாக்கியம் ஐந்து வகைப்படும்
   ஈ. கருத்து வகை வாக்கியம் மூன்று வகைப்படும்

2. அ. முத்தமிழ் இயல் இசை நாடகம்
   ஆ. முக்கனி வாழை ஆப்பிள் மாம்பழம்
   இ. முப்படை தேர் படை காலைப்படை யானை படை
   ஈ. முத்தமிழ் செந்தமிழ் பைந்தமிழ் பழந்தமிழ்

3. அ. அகங்காரம் என்பது மகிழ்ச்சி.
   ஆ. சௌக்கியம் என்பது துன்பம்.
   இ. அலட்சியம் என்பது புறக்கணிப்பு.
   ஈ. சிப்பாய் என்பது மாணவன்.

**தொகைச்சொற்கள் எழுதுக.**

1. இருவினை - ___

2. முக்கனி - ________________

3. நாற்படை - ________________

4. நானிலம் - ________________

5. அறு சுவை - ________________

**சொற்பிழை**

**பொருள் தருக.**

1. கலம் - ________________

   களம் – ________________

2. வழி - ________________

   வளி – ________________

3. பணி - ________________

   பனி – ________________

4. வேலை - ________________

   வேளை – ________________

5. வண்மை - ________________

   வன்மை – ________________

**பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக;**

**1.** அக்கிரமம் -________________

**2.** இஷ்டம் -________________

**3.** கிஸ்தி - ________________

**4.** சிப்பாய் - ________________

**5.** தசம் – ________________

**வடிவங்கள்**

1. உருளை –

2. செவ்வகம் –

3. நீள் வட்டம் –

4. *சதுரம்* –

5. *கூம்பு* –

*6. ஐங்கோணம் -*

## பகுதி - இ (உரைநடை மற்றும் செய்யுள் )

## மாசில்லாத உலகம் படைப்போம் (உரைநடை)

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

**1.** மாசு - என்னும் பொருள் தராத சொல் _________.

2. மாசு +இல்லாத- என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

3. அவ்வுருவம் - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

4. நெடிதுயர்ந்து - என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

5. குறையாத- என்ற சொல்லின் எதிர்ச்சொல் _________.

**ஆ) விடை தருக.**

1. ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் என்ன செய்தி இருந்தது ?

2. அறிவியல் விழாவில் கலந்து கொள்வதற்காக மாணவர்களை ஆசிரியர் எவ்வாறு ஊக்கப்படுத்தினார் ?

**3.**அறிவியல் விழாவில் காணப்பட்ட நெடிதுயர்ந்த உருவத்தை எப்படி உருவாக்கினர் ?

4. சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு எவையெல்லாம் காரணமாக அமைகின்றன ?

5. நாம் பயன்படுத்திய மின் பொருள்களை என்ன செய்ய வேண்டும் ?

## திருக்குறள் கதைகள் (உரைநடை)

**அ) பொருள் தருக.**

1. மெய்ப்பொருள் = ________________________________

2. காவாக்கால் = ________________________________

3. சோகாப்பர் = ________________________________

4. சொல்லிழுக்கு = ______________________________

5. பொறை = ______________________________

6. வெகுளாமை = ______________________________

**ஆ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக**

1 நிறையுடைமை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

2. மெய் + பொருள் - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

3. போற்றி ஒழுகப்படும் பண்பு _________.

**இ) பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.**

1. ஆய்வகம் _________________________ இருந்தது. ( மேல்தளத்தில் / மேல்தலத்தில் )

2. எடிசன் மின் ____________ உருவாக்கினார். ( விளக்கு/ விலக்கு )

3. குற்றம் _______ யாரிடம்தான் இல்லை. ( குறை / குரை )

**ஈ) பொருத்தமான வினாச்சொல்லைத் தேர்ந்தெடுத்து வினாத்தொடரை முழுமையாக்குக.**

( யாது, யாவை, எங்கு, எது, எப்படி, என்ன, யார், யாருடைய )

1. உன்னுடைய ஊரின் பெயர் ______?

2. உனக்குப் பிடித்த வண்ணம் _______?

3. நீ பள்ளிக்கு ______ வருகிறாய் ?

4. உன்னுடைய நண்பன் ___?

5. கோடை விடுமுறைக்கு ________ சென்றாய் ?

6. மெய்ப்பொருள் என்பதன் பொருள் _______?

7. குறில் எழுத்துகள் _______ ?

8. சாருமதி _________ வீட்டிற்குச் சென்றாள் ?

**உ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு _____.

2. திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் __________, __________.

**ஊ) விடை தருக.**

1. பொறையுடைமையை ஏன் போற்ற வேண்டும் ?
2. எது அறிவான செயல் என்று வள்ளுவர் கூறுகிறார் ?
3. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன ?
4. சினம் எப்போது ஒருவரை அழிக்கும் ?.
5. மாட்டு வண்டிக்காரரின் கோபத்திற்கான காரணம் யாது ?

## *நீதிநெறி விளக்கம்*

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. அவையஞ்சி - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

2.இன்னலம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.

3. கல்லார் - இச்சொல்லின் எதிர்ச்சொல் _________.

**ஆ) பொருள் தருக.**

1. மெய் = ______________________________
2. விதிர்ப்பார் ≑ ______________________________
3. ஆகுலச்சொல் = ______________________________
4. அஞ்சி = ______________________________
5. நல்கூர்ந்தார்= ______________________________
6. பூத்தல்= ______________________________
7. நவை =______________________________

**இ) விடை தருக.**

1. கல்வி கற்றவரின் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும்?
2. பொருளற்ற சொற்களை அவையினர் முன் பேசுபவர் யார் ?
3. பூத்தலின் பூவாமை நன்று என்று நீதிநெறி விளக்கம் எவற்றைக் குறிப்பிடுகிறது?

**ஈ) முதல் எழுத்து ஒன்றி வரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

______________________________________________________________

**முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குப்படுத்திப் பத்தியாக்குக.**

1 இளையவன் மெழுகுவர்த்தியை வாங்கி வந்து ஏற்றி வைத்து
அறையெங்கும் ஒளிவீசச் செய்தான்.

2 வயதான தந்தைக்கு இரு மகன்கள் இருந்தார்கள்.

3 ஒருநாள் இருவரையும் அழைத்துச் சிறிது பணம் கொடுத்தார். இந்தப் பணத்தைக் கொண்டு அவரவர் அறையை நிரப்புங்கள் என்றார் தந்தை.

4 அவர்களிருவரில் பொறுப்பானவரைத் தேர்ந்தெடுத்துத் தன் உழைப்பின் பயனாய் விளைந்த செல்வத்தைக் கொடுக்க தந்தை விரும்பினார்.

5 மூத்தவன் வைக்கோல் போரை வாங்கி வந்து அறை முழுவதும் நிரப்பினான்.

6 இளையவன்தான் பொறுப்பானவன் என்று தந்தை உணர்ந்தார்.

7 அறையெங்கும் ஒளி வீசச் செய்தவனிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்தார்.

## பகுதி – ஈ எழுதுதல்

### I. கடிதம் எழுதுக.

பிறந்தநாள் விழாவிற்கு அழைப்பு விடுத்து நண்பனுக்கு கடிதம் எழுதுக.

### II.கட்டுரை எழுதுக.

சிறு சேமிப்பு - முன்னுரை - சேமிப்பின் தேவை - சேமிக்க உதவும் திட்டங்கள் - முடிவுரை .

**அடிமாறாமல் எழுதுக:**

'அவையஞ்சி ' என்னும் நீதி நெறி விளக்க பாடலை எழுதுக .

'நிறையுடைமை' என்னும் தொடங்கும் குறளை எழுதுக.

' சினம்' என முடியும் குறளை எழுதுக.

'யாகாவார்' என்னும் தொடங்கும் குறளை எழுதுக.

'அறிவு' என முடியும் குறளை எழுதுக.

*********************